**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :01/2009 பொருள் எண்.1

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

டாக்டர் திருமதி.எம்.எஸ்.ரேணுகா, அவர்கள் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக 04.03.1985 அன்று மகப்பேறு நலப்பிரிவில் பணியமர்த்தப்பட்டார். இவருடைய பிறந்த தேதி 09.11.1950 வயது முதிர்வு ஓய்வு பெறும் நாள். 30.11.2008

இவர் பின்வரும் பட்டியலின்படி பணிவரன்முறைப்படுத்தப்பட்டு (ம) தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

| பணியில் சேர்ந்த நாள் | பணி உறுதியாக்கம் (ம) பணிவரன் முறை நாள். | தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| மருத்துவ அலுவலர் நாள்.04.03.1985 | 04.03.1985 அ.ஆ.937, சு.இ.ம(ம) ஓ(ம)கு.ந.து. நாள்.17.04.1976 மன்றத் தீர்மான எண்.3480/94 நாள்.11.10.1994 | 06.04.1987 அ.ஆ.937, சு.இ.ம(ம) ஓ(ம)கு.ந.து. நாள்.17.04.1976 மன்றத் தீர்மான எண்.3480/94 நாள்.11.10.1994 |

தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 16.10.2008 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் சென்னை மாநகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் எற்படுத்தவில்லை. தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை. இவர் மீது தனிப்பட்ட முறையிலோ, கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை. இவரது நியமனம் ஊதியம் (ம) விடுப்பு குறித்து தணிக்கை தடை ஏதும் இல்லை. இவரது சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்று நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி–2ம் நிலை அலுவலர், எனவே, இவரை பணியிலிருந்து விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெறவேண்டும். காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு தனியரை 30.11.2008 அன்று பிற்பகல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, டாக்டர் திருமதி.எம்.எஸ்.ரேணுகா, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை என்பவர் நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு மற்றும் நீண்ட கால முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு இவரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் இவரை 30.11.2008 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளித்த நிகழ்விற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :02/2009 பொருள் எண். 2

### வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

திருமதி.கே.ரவீந்திரி மருத்துவ அலுவலர், சுகாதாரப்பிரிவு, மண்டலம்–7, அவர்கள் வயது முதிர்வு ஓய்வு நாள். 30.11.2008.

திருமதி.கே.ரவீந்திரி, உதவி அறுவை சிகிச்சையாளராக 14.11.1975 அன்று தகுதிகாண் பருவம் இன்றி சிறப்பு ஊட்ட சத்துணவு திட்டத்தில் பணியில் சேர்ந்தார்.

மேற்படி சிறப்பு சத்துணவு திட்டம் 14.09.1982 அன்று முற்பகல் கலைக்கப்பட்டதால் மேற்படி மருத்துவ அலுவலர் மருத்துவமனையின் பிரிவில், சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் மருத்துவ அலுவலராக புதிதாக தகுதிகாண் பருவம் இன்றி 15.09.1982 முதல் பணியில் சேர்ந்தார். அவர் சிறப்பு சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றிய காலம் எதுவும் கணக்கில் எடுத்துக் கொள்ளாது பணியில் அமர்த்தப்பட்டார்.

அரசு ஆணை எண்.31 நாள்.12.01.1988 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின்படி மேற்படி மருத்துவ அலுவலர் அவர் சிறப்பு ஊட்டச்சத்து பிரிவில் பணி புரிந்த காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அந்த காலத்திற்கு உண்டான பணப்பயன்கள், ஊதிய உயர்வு மற்றும் ஓய்வு கால பயன்கள் பெறவும், அனுமதிக்கப்பட்டு அவ்வாரே அவர்களுக்கு வழங்கப்பட்டன. மற்றும் மேற்படி மருத்துவ அலுவலர் தகுதிகாண் பருவத்தை 29.05.1979 அன்று நிறைவு செய்து அவர் தன்னுடைய பதிவியில் சு.து.ந.க.எண்.சி6/3065/84, நாள்.02.07.1984ன்படி தகுதிகாண் பருவத்தினராக அறிவிக்கப்பட்டார்.

தனியர் மீது துறை ரீதியாகவும் வேறு எந்த ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் ஏதும் இல்லை. தனியர் செயல் அலுவலர்க்கான கணக்கு தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்பு தேர்வு தேர்ச்சி பெற்று தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடையோ முன்பண நிலுவையோ ஏதும் இல்லை.

தனியரை உள்ளாட்சி நிதி தணிக்கையினரால் சுட்டி காட்டப்படும் தணிக்கை தடைகளால் நிதி இழப்பீடு மற்றும் முன்பண நிலுவைத் தொகை ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை இவரது ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் 30.11.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

எனவே, திருமதி. கே.ரவீந்திரி, மருத்துவ அலுவலர், மண்டலம்–7, அவர்கள் 30.11.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி வழங்கியதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ7.ந.க.எண்.எச்1/0941/2008**
**ஆணையாளர் அவர்களின் 10.12.2008 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :03/2009 பொருள் எண்.3

**தன்விருப்ப ஓய்வு பின்னேற்பு அனுமதி**

டாக்டர் திருமதி.கீதா பாஸ்கர்ராவ், மருத்துவ அலுவலர் தன் உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும், குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தொடர்ந்து பணிக்கு வர இயலாத காரணத்தால் தனக்கு 30.11.2008 பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வு வழங்க கேட்டுக் கொண்டு முன்னறிவிப்பு கடிதத்தை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு 23.07.2008 அன்று மனு செய்துள்ளார்.

இதுகுறித்து தெரிவித்துக் கொள்வது யாதெனில், டாக்டர் திருமதி.கீதா பாஸ்கர்ராவ் அவர்கள் இத்துறையில் 18.08.1984 அன்று மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டு இதுநாள் வரை தொடர்ந்து பணி செய்து வருகிறார். தனியருக்கு இப்பதவியில் பணி வரன்முறைப்படுத்தி தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் தன்விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த அன்று 55 வயதை பூர்த்தி செய்துள்ளார். மேலும் 20 ஆண்டுகள் தகுதியுள்ள பணிக்காலம் பூர்த்தி செய்துள்ளார். இவரது தாய்மொழி தமிழ் ஆகும். இவருடைய பதவி வகுப்பு 2–ன் கீழ் சார்ந்துள்ளதால் இப்பதவிக்கு தேவையான தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் துறை தேர்வான மெடிக்கல் கோட் மற்றும் நிர்வாக அலுவலருக்கான கணக்கு தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

இவர் சென்னை மாநகராட்சியிலிருந்து நீண்ட கால முன்பணம் மற்றும் குறுகிய கால முன்பணம் ஏதும் பெறவில்லை மேலும் சென்னை மாநகராட்சியால் தனியருக்கு குடியிருப்பு ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என சான்றளிக்கப்படுகிறது.

இவர் தன்விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 55 வயதை பூர்த்தி செய்துள்ளார். மேலும் இவர் 24 ஆண்டுகள், 2 மாதம், 28 நாட்கள் தகுதியுள்ள பணிக்காலம் பூர்த்தி செய்துள்ளார்.

தனியர் மீது இத்துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் கீழ்கண்டுள்ள சான்றுகள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

1) சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என சான்று.
2) சென்னை மாநகராட்சி, கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என சான்று.
3) சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நீண்ட கால, குறுகிய கால முன்பணம் ஏதும் செலுத்த வேண்டியது நிலுவையில் இல்லை என மண்டல அலுவலர், மண்டலம்–7 அவர்களிடமிருந்து சான்று.
4) தனியர் மீது தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என துறை தணிக்கை சான்று
5) தனியர் 30.11.08 பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி வழங்கலாம் என உள்ளாட்சி நிதித்தணிக்கை அலுவலக கடிதம் பெறப்பட்டுள்ளது.

தனியரால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படும் இனம் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை இவருக்கு வழங்க வேண்டிய ஓய்வு கால பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யலாம்.

அடிப்படை விதி 56 (3) (C)ன்படி தனியர் 24 ஆண்டு கால பணி நிறைவு செய்துள்ளதாலும், தன்விருப்ப ஓய்விற்கு 90 நாட்களுக்கு முன்னதாக முன்னறிவிப்பு கடிதத்தை உரிய நியமன அதிகாரிக்கு 23.07.2008 அன்று மனு செய்துள்ளதாலும், மன்றத்தில் அனுமதி பெற்று தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

எனவே, டாக்டர் (திருமதி) கீதா பாஸ்கர்ராவ், மருத்துவ அலுவலர், மண்டலம்–7, அவர்கள் தன்விருப்ப ஓய்வுக்கான முன்னறிவிப்பு கடிதம் 23.07.2008 நாளிட்ட கோரிக்கை முறையாக உள்ளதால் தனிப்பட்ட / அலுவலக முன்பணம் மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கையினரால் சுட்டிக்காட்டப்படும் தணிக்கை தடைகளுக்கு, நிதி இழப்பீடு ஏற்படுவது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 30.11.2008 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல நியமனக்குழுவின் தீர்மான எண்.399/08ன்படி அனுமதி பெறப்பட்டது. இந்நிலையில் மன்றக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதால் தனியரை மன்றத்தின் பின்னேற்பாணைக்குட்பட்டு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டது. இதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழுவின் மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.7
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி13/35658/2008</u>
<u>ஆணையாளர் அவர்களின் 10.12.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :04/2009 பொருள் எண். 4

<u>ஓய்வூதியம்</u>

டாக்டர் பி.ஜனார்தனன், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, அவர்கள் பணியிலிருந்து 31.05.2008 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 31 வருடங்கள் 11 மாதங்கள் 03 நாட்கள் (அ) 64 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.3326/எ4/2008, நாள்.06.11.2008 சான்றின்படி 01.06.2008 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.11,588/— இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/— மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,862/— தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,84,759/— பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி டாக்டர் ரவீந்திரி ஜனார்தனன், அவர்கள் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,950/— 12.05.2015 வரையிலும், குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 13.05.2015 முதல் ரூ. 6,570/— பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், டாக்டர் பி.ஜனார்தனன், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, அவர்களுக்கு 01.06.2008 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.11,588/— இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/—ல் தணிக்கைத் தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/— பிடித்தம் செய்து மீதத் தொகையான ரூ.2,62,500/— வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,862/— (ரூபாய் மூவாயிரத்து எண்ணூற்று அறுபத்தி இரண்டு மட்டும்) தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,84,759/— (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்தி நான்காயிரத்து ஏழு நூற்று ஐம்பத்தி ஒன்பது மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.11,588/—லிருந்து ரூ.7,726/—ஆக குறைத்து வழங்கவும், தனியரது காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி டாக்டர் ரவீந்திரி ஜனார்தனன், அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,950/— 12.05.2015 வரையிலும், குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 13.05.2015 முதல் ரூ. 6,570/— வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/1792/2007**
**ஆணையாளர் அவர்களின் 31.12.2008 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :05/2009 பொருள் எண்.5

**பணிவரன்முறைப்படுத்த அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் காலியாக இருந்த 8 மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் 2007 ஏப்ரல் மாதம் முதல் நாளை மைய நாளாக கொண்டு தயாரிக்கப்பட்டு மன்றத் தீர்மானம் எண்.711/2007, நாள்.29.12.2007ன்படி மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, பின்வரும் மருத்துவ அலுவலர்களை அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தேதி முதல் மண்டல அலுவலர்களாக (குடும்ப நலம்) தற்காலிகமாக ரூ.9100–275–14050 என்ற காலமுறை சம்பள விகிதத்தில் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக பதவி உயர்வு வழங்கி பணி நியமனம் செய்யப்பட்டனர்.

| வ.எண் | மண்டல அலுவலர் பெயர் | மண்டல அலுவலர் பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 01 | டாக்டர் திருமதி.கே.புஷ்பா | 21.01.2008 முற்பகல் |
| 02 | டாக்டர் திருமதி.சம்சுனிசா | 21.01.2008 முற்பகல் |
| 03 | டாக்டர் திருமதி.எம்.மணிமேகலை | 21.01.2008 முற்பகல் |
| 04 | டாக்டர் திருமதி.கே.மனோகரி | 21.01.2008 முற்பகல் |
| 05 | டாக்டர் திருமதி.பா.காஞ்சனமாலா | 21.01.2008 முற்பகல் |
| 06 | டாக்டர் திருமதி.பி. கலைச்செல்வி | 21.01.2008 முற்பகல் |
| 07 | டாக்டர் திருமதி.எஸ்.ஹேமலதா | 21.01.2008 முற்பகல் |
| 08 | டாக்டர் திருமதி.டி.எம்.சுமதி | 21.01.2008 முற்பகல் |

அரசாணை (மாந3) (ப) எண்.459 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.10.2008ன்படி மேற்படி பட்டியலுள்ளபடி அவரவர் மண்டல அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் அரசு உறுதியாக்கம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. அரசாணையினை தொடர்ந்து பட்டியலில் உள்ளபடி 8 மண்டல அலுவலர்களது பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தேதி முதல் பணிவரன்முறை செய்ய மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ10.சு.து.ந.க.எண்.எ1/861/2007**
**ஆணையாளர் அவர்களின் 11.03.2008 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :06/2009 பொருள் எண். 6

**தகுதிகாண் பருவம் அறிவித்தல்**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்–10ல் பணிபுரியும் டாக்டர் திருமதி.பி.சாந்தி அவர்கள் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டு 13.07.1998 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகின்றார். தனியருக்கு 13.07.1998 முற்பகல் முதல் அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டு (அரசாணை (பத்தாண்டு) எண்.529, நாள்.23.11.2001) பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

தனியர் தனக்கு இப்பதவியில் இரண்டாண்டு காலம் முடிந்து விட்டமையால் தகுதிகாண் பருவம் அளிக்கக் கோரியுள்ளார்.

தனியர் மீது இதுநாள் வரை எவ்வித குற்றச்சாட்டுகளும் இல்லாமல் பணிபுரிந்து வருகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் இரண்டு ஆண்டுகளாய் சம்பளமில்லா விடுப்பு துய்க்கவில்லை.

கணக்கு அலுவலர், மண்டலம்–10, அவர்களும் தனியருக்கு தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க 07.12.2007 நாளிட்ட குறிப்புரையில் தெரிவித்துள்ளார்.

எனவே, டாக்டர் திருமதி.பி.சாந்தி மருத்துவ அலுவலர் அவர்களுக்கு 13.07.2000 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.10
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.ஈ3/52771/1991
ஆணையாளர் அவர்களின் 18.12.2008 நாளிட்ட குறிப்பு

27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :07/2009 பொருள் எண்.7

பணியமைப்பு – தற்காலிக பணி நீட்டிப்பு

சென்னை மாநகராட்சியில் அரசாணை (பல்வகை) என்.328 ந.நி.(ம).கு.வ.துறை, நாள்.04.12.1991ன் படி தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்டு தொடர் நீட்டிப்பு செய்யப்பட்டு வரும் ஐந்து துணை ஆணையர் பதவிகள் மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பணியில் பதவிகள் ஒவ்வொரு ஆண்டும் அரசின் அனுமதி பெற்று நீட்டிக்கப்பட்டு வந்தது.

அரசாணை (பல்வகை) எண்.83, ந.நி.(ம).கு.வ.துறை. நாள்.06.04.1993ன் படி, சென்னை மாநகராட்சியில் ஒரு துணை ஆணையர் (போக்குவரத்து) பதவியும், அதனைச் சார்ந்த துணைப் பணியாளர் பதவிகளும் கலைக்கப்பட்டன மற்ற 4 துணை ஆணையர் பதவிகள் மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பணியாளர்கள் பதவிகளான 4 சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளும் அரசின் கடைசி நீட்டிப்பு 11.04.07. நாளிட்ட அரசாணை (பல்வகை) எண்.155, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3.) துறையின் படி, 01.01.07 முதல் 31.12.07 வரையில் பணி நீட்டிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. 01.01.2008 முதல் 31.12.2008 வரை மேலும், ஓராண்டிற்கு நீட்டிக்க மன்றத் தீர்மானம் எண்.706/07, நாள்.29.12.2007ல் பெறப்பட்டு, அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு அரசின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இந்நிலையில், இந்திய ஆட்சிப் பணிக்கான ஊதிய விகிதம் மற்றும் இதர படிகள் கொண்டுள்ள 4 துணை ஆணையர் பதவிக்கும் மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பணியாளர்களான 4 சுருக்கெழுத்து தட்டச்சர் (ஊதிய விகிதம் ரூ.5,000–150–8,000 மற்றும் இதர படிகள்) பதவிகளையும் 01.01.2009 முதல் மேலும் ஓர் ஆண்டிற்கு நீட்டிப்பு செய்ய அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>ம.அ5.ந.க.எண்.சி2/6359/2005</u>
<u>ஆணையாளர் அவர்களின் 08.12.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :08/2009 பொருள் எண்.8

<u>பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்</u>

திருமதி.முனியம்மா, துப்புரவு பணியாளர், கோட்டம்–78, பகுதி–15, அவர்கள் 23.06.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக குறிப்பாணை வழங்கப்பட்டது. விளக்கம் காலதாமதமாக பெறப்பட்டது. அதில் அவரது கணவர் மாலகொண்டைய்யா காணமால் போய் பல வருடங்கள் ஆனது என்றும், இந்நிலையில் அவரது கணவர் ஊரில் (ஆந்திராவில்) உள்ளதாக தகவல் வந்ததும் அவசரமாக ஊருக்கு சென்று பல இடங்களில் தேடிப் பார்த்தும் அவரது கணவர் கிடைக்காமல் சென்னைக்கு திரும்பியதாகவும் அவரது கணவரை தேடி அவசரமாக ஊருக்கு செல்ல நேரிட்டதால் அவரால் முன் கூட்டியே விடுப்பு குறித்த தகவலை தெரிவிக்க முடியவில்லை என்றும் முன் அனுமதியின்றி விடுப்பு எடுத்தமைக்காக அவரை மன்னித்து மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளவும் பணிக்கு வராத நாட்களுக்கு சம்பளம் இல்லாத விடுப்பு அளிக்கவும் கோரியுள்ளார். பணியாளர் அளித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லை.

எனவே, சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் குற்றங்கள் சுமத்தி விளக்கம் கேட்கப்பட்டது.

<u>குற்றச்சாட்டு:1</u> தனியர் 23.06.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்.

<u>குற்றச்சாட்டு:2</u> மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு காலதாமதமாக விளக்கமளித்துள்ளீர்.

<u>குற்றச்சாட்டு:3</u> துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்.

மேற்கண்ட குற்றங்களுக்காக குற்றக் குறிப்பாணை வழங்கப்பட்டது. விளக்கம் பெறப்படவில்லை.

பணியாளர் மீதுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய திரு.என்.சஞ்சீவி, ஓய்வு பெற்ற துணை ஆணையர், தொழிலாளர் நலத்துறை, அவர்கள் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டார். அதன்படி பணியாளரை விசாரணை செய்து விசாரணை அலுவலர் தனது 18.04.2005 நாளிட்ட அறிக்கையில் பணியாளர் மீது சுமத்தப்பட்ட 3 குற்றச்சாட்டுகளில் 2 குற்றச்சாட்டுகள் நிரூபணமாவதாக அறிக்கையளித்துள்ளார்.

தற்பொழுது உள்ள விதிகளின்படி விசாரணை அலுவலர் அறிக்கையின் நகல் தனியருக்கு சார்பு செய்து மேல் விளக்கம் கோரப்பட்டது. அதனை பெற்ற பணியாளர் தனது 18.05.2005 நாளிட்ட அறிக்கையில் அவர் முன்னறிவிப்பின்றி 23.06.2003 முதல் விடுப்பு எடுத்தமைக்காகவும் குறிப்பாணைக்கு பதில் விளக்கம் அளிக்காமல் இருந்தமைக்காவும் தன் மீது விசாரணை நடத்தப்பட்டது என்றும் விசாரணையின் போது அவர் தனது கணவர் காணாமல் போனதால் அவரை தேடி பல ஊர்களுக்கு சென்றதால் தன்னால் பணிக்கு வர இயலாமல் போனது என்றும் அவர் அவசரமாக ஊருக்கு செல்ல நேரிட்டதால் தனது கணவர் திரு.மாலக்கொண்டைய்யா, அவர்களும் சென்னை மாநகராட்சியில் நிரந்தர துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்தவர் என்றும் இவர் காணாமல் போனதால் அவர் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டதால் தொடர்ந்து சம்பளமில்லா விடுப்பு எடுக்க நேரிட்டது என்றும், தன் மீது கருணை கொண்டு மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளவும் கோரியுள்ளார்.

பணியாளர் அளித்த விளக்கத்தின் பேரிலும் ஆணையர் அவர்களின் ஆணையின்படியும் பணியாளரை மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. அதன்படி பணியாளர் 22.06.2005 முதல் பணியில் சேர்ந்து 30.06.2005 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

எனவே, தனியர் 30.06.2005 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றவர் 23.06.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து பணியாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அதற்கு பணியாளரின் விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை மற்றும் அதற்கு தனியரின் கூடுதல் விளக்கம் ஆகிய தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. விசாரணை அலுவலரின் அறிக்கை முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் கடுமையானவை அவை கடுமையான தண்டனைக்குரியவை. எனினும் நிகழ்வு கருணையுடன் அனுகப்பட்டதில் இறுதி ஆணையாக தண்டத் தொகையாக ரூ.1200/– விதித்து

<u>ம.அ5.ந.க.எண்.சி2/6359/2005</u>

தனியரின் பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்ய ஆணையிடப்பட்டது. மேலும் பணிக்கு வராத காலமான 23.06.2003 முதல் 21.06.2005 வரையிலான காலம் ஓராண்டை கடந்துவிட்ட நிலையில் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பி வரன்முறைப்படுத்தவும் செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

எனவே, திருமதி.முனியம்மா, துப்புரவு பணியாளர், கோட்டம்–78, பகுதி–15, அவர்கள் 23.06.2003 முதல் 21.06.2005 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டினைக் கடந்துள்ளதால் வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

க.து.ந.க.எண்.பி3/4477/2008
ஆணையர் அவர்களின் 06.01..2009 நாளிட்ட குறிப்பு

## 27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :09/2009 பொருள் எண் :9

### பழைய கட்டடத்தை இடிப்பதற்கு அனுமதி

வார்டு எண் : 41 மண்டலம் : 3

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | வார்டு – 41ல், புளியாந்தோப்பு சென்னை மாநகராட்சி மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையம் வளாகத்தில் அமைந்துள்ள பழுதடைந்த கட்டிடங்களை இடிப்பதற்கு |
| இடிக்கப்படவேண்டிய கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சுமார் 30 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதாகும். |
| இடிக்கப்படவேண்டிய கட்டடத்தின் பரப்பளவு | இடிக்கப்படவுள்ள கட்டடங்கள் முறையே சத்துணவுக்கூடம் எண்.505 – 800.01 சதுர.அடி.), சத்துணவுக்கூடம் எண்.506 – 800.01 சதுர.அடி), கல்நார்கூறை வேய்ந்த மருந்தகம் (413.00 சதுர.அடி) மற்றும் RMO குடியிருப்பு (895.00 சதுர.அடி.), ஆக மொத்தம் 2908.02 சதுர அடிகளாகும். |
| இடிக்கப்படவேண்டிய கட்டடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | புத்தக மதிப்பு முறையே சத்துணவுக்கூடம் எண்.505க்கு ரூ.17,821.83, சத்துணவுக்கூடம் எண்.506க்கு ரூ.17,667.89, கல்நார்கூறை வேய்ந்த மருந்தகம் ரூ.23,589.27 மற்றும் RMO குடியிருப்புக்கு ரூ.63,286.14 ஆக மொத்தம் ரூ.1,22,365.13 ஆகும். |
| கட்டடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்து பயன்படாத நிலையில் உள்ளது. EOC (24x7) கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை..../ மண்டலம் | கட்டடத்துறை |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 3வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.789/2008 நாள் : 10.12.2008 |

எனவே, மேற்கண்ட பணியிடத்தில் பழுதடைந்து பயன்படாத நிலையில் உள்ள கட்டடங்களை இடிப்பதற்கு நிலைக்குழுக்கள் (கல்வி), (பொது சுகாதாரம்) மற்றும் (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

7.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மானஎண். 03/2009 நாள் 7.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"09.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.4, நாள்: 09.01.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"12.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.2/2009, நாள்: 12.01.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.ம.அ.9/765/2008**
**ஆணையர் அவர்களின் 08.12.2008 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :10/2009 பொருள் எண்.10

**சென்னை மாநகராட்சி மருந்தக கட்டடம் கட்டுவதற்கு அனுமதி**

சுகாதாரத்துறை–வார்டு–139, மண்டலம்–9, – வெங்கடாபுரத்தில் புதிய மருந்தக கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வேண்டுதல்

----

திரு. மகேஷ்குமார், மன்ற உறுப்பினர், வார்டு–139, அவர்களின் 21.05.2008 தேதியிட்ட கடிதத்தில் வெங்கடாபுரம் பகுதி அருகில் உள்ள வினாயகர் கோயில் தெரு, வேளச்சேரி சாலை, சின்னமலை பகுதிகளில் வசித்துவரும் பொது மக்களின் நலனுக்காக வெங்கடாபுரம் பகுதியில் மருந்தகம் அமைத்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

சைதாப்பேட்டை பஜார் சாலையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதார மையம் உள்ளது. மேலும் இதனருகில் அரசு மருத்துவமனை ஒன்றும் உள்ளது.

வெங்கடாபுரம் காலனி, வினாயகர் கோயில் தெரு, வேளச்சேரி சாலை, சின்னமலை ஆகிய பகுதிகளில் சுமார் 15000 மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் வாழும் பொது மக்கள் தங்களின் அடிப்படை சுகாதார தேவைக்காக நெடுந்தூரம் சென்று தான் சிகிச்சை பெற வேண்டியுள்ளது.

வார்டு–139ல் வெங்கடாபுரம் கிராமம் பிளாக்–6, சர்வே எண்.111/பகுதியில் அடங்கியுள்ள 191.6 சதுர மீட்டர் பரப்பளவுள்ள பூங்காவிற்கென ஒதுக்கப்பட்டுள்ள காலி நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடமிருந்து 2000ஆம் ஆண்டு நி.ம.உ.து.ந.க.எண்.எஸ்சி.2/933/99, நாள்:03.07.2000ன்படி சென்னை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மண்டலம்–9, வார்டு–139, வெங்கடாபுரம் பகுதியில் உள்ள மேற்குறிப்பிட்ட நிலத்தில் சென்னை மாநகராட்சி மருந்தகக் கட்டடம் கட்டுவதற்கு 9வது மண்டல வார்டுகுழு தீர்மான எண்.181, நாள்:30.10.2008ன்படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

எனவே, வார்டு–139ல் வெங்கடாபுரம் கிராமம் பிளாக்–6, சர்வே எண்.111/பகுதியில் அடங்கியுள்ள 191.6 சதுர மீட்டர் பரப்பளவுள்ள பூங்காவிற்கென ஒதுக்கப்பட்டுள்ள காலி நிலத்தில் சென்னை மாநகராட்சி மருந்தகக் கட்டடம் கட்டுவதற்கு நிலைக்குழுக்கள் (பொது சுகாதாரம்) மற்றும் (பணிகள்) மூலமாக மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"09.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.1, நாள்: 09.01.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"12.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.1/2009, நாள்: 12.01.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>சு.து.ந.க.எண்.கா.பி.அ1/310/2008</u>
<u>ஆணையர் அவர்களின் 03.01.2009 நாளிட்ட குறிப்பு.</u>

<u>27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :11/2009 பொருள் எண்: 11

<u>சுகாதாரத்துறை–கால்நடைப்பிரிவு–தென் சென்னையில் பிடிக்கப்படும் நாய்களுக்கு வெறிநாய் தடுப்பூசி மற்றும் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்ள மண்டலம்–6 லாயிட்ஸ் சாலையில் அமைந்துள்ள 'ஈ' மாட்டுத் –தொழுவத்தினை – அரசு சாரா புளுகிராஸ் ஆப் இந்தியா என்ற நிறுவனத்திற்கு – மூன்று ஆண்டுகளுக்கு பயன்படுத்திக் கொள்ள – அனுமதி வழங்கப்பட்டது – மேலும் மூன்று ஆண்டுகளுக்கு – (2009–2012) வரை நீட்டிப்பு செய்ய –மாமன்றத்தின் – உத்தரவு வேண்டுவது.</u>

தென் சென்னையில் பிடிக்கப்படும் நாய்களுக்கு இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் திட்டத்திற்கென மண்டலம்–6, கோட்டம் –92 லாயிட்ஸ் காலனியில் அமைந்துள்ள நாய் இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மையத்தினை மூன்றாண்டு காலத்திற்கு புளு கிராஸ் ஆப் இந்தியா என்ற தொண்டு நிறுவனத்திற்கு 01.03.2000 முதல் 28.02.2003 வரை வழங்கப்பட்டது. மேலும் 01.03.2003 முதல் 28.02.2006 வரை தெரு நாய்களுக்கு இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்திட நீடிப்பு அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் மேலும் மூன்று ஆண்டுகள் 01.03.2006 முதல் 28.02.2009 வரை நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்த அனுமதி 28.02.2009 தேதியுடன் முடிவடைகிறது. தற்போது மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்திட, தலைவர் புளுகிராஸ் ஆப் இந்தியா அவர்கள் அளித்துள்ளார்.

மேற்படி புளு கிராஸ் ஆப் இந்தியா என்ற தொண்டு நிறுவனம் கடந்த ஒன்பது ஆண்டுகளாக தொடர்ந்து சீரிய முறையில் தென் சென்னை பகுதியில் பிடிக்கப்படும் நாய்களுக்கு இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மற்றும் வெறி நாய் தடுப்பூசி போடும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த மூன்றாண்டுகளில் 18,582 நாய்களுக்கு மேற்படி நிறுவனத்தின் மூலம் இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களது கோரிக்கையினை ஏற்று மேலும் மூன்று ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு வழங்கலாம். எனவே கீழ்கண்ட இனங்களுக்கு ஒப்பம் வேண்டப்படுகிறது.

1. மண்டலம்–6, கோட்டம்–92, லாயிட்ஸ் காலனியில் அமைந்துள்ள நாய் இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மையத்தினை புளுகிராஸ் ஆப் இந்தியா என்ற அரசு சார்பற்ற தொண்டு நிறுவனத்திற்கு மேலும் மூன்று ஆண்டுகளுக்கு 01.03.2009 முதல் 29.02.2012 வரை தற்காலிகமாக அனுமதி வழங்கவும்,
2. தென் சென்னை பகுதியில் சென்னை மாநகராட்சி மூலம் பிடிக்கும் நாய்களுக்கு புளுகிராஸ் ஆப் இந்தியா என்ற அரசு சாரா தொண்டு நிறுவனத்தின் செலவிலேயே நாய் இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மற்றும் வெறி நாய் தடுப்பூசி போடும் திட்டத்தினை மேற்கொள்ளவும்,
3. மேற்படி அறுவை சிகிச்சை அறை மற்றும் நாய் பராமரிப்பு அறைகளுக்கு தேவையான பராமரிப்பு பணிகளை மண்டல அலுவலர்–6 அவர்கள் மேற்கொள்ளவும்;

நிலைக்குழு(பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"09.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.2, நாள்: 09.01.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>க.து.ந.க.எண்.தொ.ப.நி. / 073 / 2008</u>

<u>ஆணையாளர் அவர்களின் 21.11.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :12/2009 பொருள் எண்.12

<u>தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் சேர்க்கைக்கு வழிமுறைகள் மாற்றியமைக்க பரிந்துரை</u>

சென்னை மாநகராட்சி அனைத்து உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு தேர்ச்சி பெற்று மேற் கொண்டு உயர் கல்வியை தொடர முடியாத சமுதாயத்தில் பின் தங்கிய ஏழை எளிய மாணவர்கள் எதிர் காலம் சிறக்க தொழிற் கல்வி உடன் கூடிய கல்வி தேசிய வாழ்வியல் பயிற்சி (National Council for Vocational Training) முறையில் பயிற்சி அளிக்க வேண்டி ஓர் தொழிற் பயிற்சி நிலையம் சென்னை மாநகராட்சி கல்வித்துறையில் கீழ் கண்ட ஆறு பாட பிரிவுகளுடன் அரசு ஆணை நிலை எண் 55 தொழிலாளர் (ம) வேலை வாய்ப்பு துறை எஸ்.2 நாள் 26.04.1999 ன் படி துவங்கப்பட்டது.

| வரிசை எண் | தொழிற்பிரிவுகளின் பெயர் | கல்வித் தகுதி | பயிற்சி காலம் | அனுமதித்தஅலகுகள் மற்றும் மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | கணினி இயக்குநர் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்புஉதவியாளர் | +2 தேர்ச்சி | 1 வருடம் | 1+1 / (20+20 = 40) |
| 2. | குழாய் பொருத்துநர் | 8ம் வகுப்பு தேர்ச்சி | 1 வருடம் | 1+1 / (20+20 = 40) |
| 3. | பொருத்துநர் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 2 வருடம் | 1+1 / (20+20 = 40) |
| 4. | கம்மியர் மோட்டார் வாகனம் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 2 வருடம் | 1+1 / (20+20 = 40) |
| 5. | மின் பணியாளர் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 2 வருடம் | 1+1 / (20+20 = 40) |
| 6. | கம்மியர் மின்னணுவியல் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 2 வருடம் | 1+1 / (20+20 = 40) |

அரசாணை எண் 292 ந.நி.ம.கு.வ.துறை எம்.சி–3 நாள் 06.08.04ன் படி தொழிற் பயிற்சிக்கான ஆசிரியர் மற்றும் ஆசிரியர் இல்லாத பணியாளர் இடங்கள் தொகுப்பூதியத்தில் அரசு அனுமதித்துள்ளது.

DGE&T புது டெல்லி வழங்கி உள்ள பயிற்சி பாட நூல் (Training Manual) மற்றும் பாட திட்டம் (syllabus) படி சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் NCVT பயிற்சிக்கு அனுமதி பெற கட்டிடங்கள் கட்டப்பட்டும் , மும்முனை மின்சார இணைப்பு பெற்றும் பயிற்சிக்கான உபகரணங்கள் கொள் முதல் செய்யப்பட்டும் மற்றும் பயிற்சிக்கான ஆசிரியர்கள் நியமித்து முதற் கட்ட மாநில அரசின் ஆய்வு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மூலம் நடைப் பெற்றும் இறுதி கட்ட நிலைக் குழு ஆய்வு நடைப் பெற்று DGET அங்கீகாரம் கடிதம் எண் DGE&T -6/22/6/2006-TC புது டெல்லியின் அனுமதி முதலில் கணினி இயக்குநர் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பு உதவியாளர் பாடப் பிரிவுக்கு 20.03.2007 அன்று பெறப்பட்டது.

அரசாணை எண் :55 ல் பயிற்சிக்கு மாணவர் சேர்க்கை 80% விழுக்காடு சென்னை மாநகராட்சி பள்ளியில் படித்த மாணவர்களுக்கும் மீதி 20% விழுக்காடு மாநகராட்சி ஊழியர்களின் குழந்தைகளை கொண்டு நிரப்ப ஆணை வழங்கப்பட்டதின் படி 2007 – 2008 ஆம் ஆண்டுக்கு DGE&T அனுமதி படி 2 அலகுக்கு 40 மாணவர்கள் சேர்க்கப்பட்டு கடைசி வரை பயிற்சியை தொடர்ந்த 31 மாணவர்கள் அகில இந்திய தொழிற் பயிற்சி தேர்வு ஜுலை 2008 ல் எழுதி அனைவரும் (100 சதவீதம்) தேர்ச்சி பெற்றனர். இம்மாணவர்களுக்கு தேசிய வாழ்வியல் பயிற்சிக்கான சான்றிதழ் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் அவர்களால் 13.11.2008 அன்று வழங்கப்பட்டுள்ளது.

DGET அங்கீகாரம் கடிதம் எண் DGE&T-6/22/6/2006-TC யின் அனுமதி குழாய் பொருத்துநர் பாட பிரிவு ஓர் அலகு நடத்த (19 மாணவர்கள் மட்டும்) 23.03.2008 அன்று பெறப்பட்டுள்ளது.

இந்த 2008 – 2009 கல்வி ஆண்டுக்கு சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் அரசாணை 55ன் படி சேர்க்கைக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் கீழ் வருமாறு:–

1) இந்த 2008 – 2009 கல்வி ஆண்டுக்கு கணினி இயக்குநர் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பு உதவியாளர் மற்றும் குழாய் பொருத்துநர் பாட பிரிவுக்கு மாணவர் சேர்க்கை செய்யப்படுவது குறித்து சென்னை மாநகராட்சி அனைத்து உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு துண்டு பிரசுரம் (சுமார் 5000) சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு சென்று சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய ஆசிரியர்கள் மூலம் வழங்கப்பட்டது.

2) சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய மாணவர் சேர்க்கைகுறித்து சென்னை மாநகராட்சி அனைத்து துறை தலைவர்களுக்கும் மற்றும் துறை ஊழியர்களுக்கும் சுற்றிக்கை 20.05.2008 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

3) மேலும் தொழிற் பயிற்சி நிலையத்தில் மாணவர் சேர்க்கை குறித்து அனைத்து பயனாளிகளுக்கும் தெரிவிக்கும் பொருட்டு ஆணையர் ஆணை பெற்று இருமுறை 15.06.2008 மற்றும் 05.08.2008 ஆகிய நாள்களில் இரண்டு தினசரி நாள் ஏடுகளில் விளம்பரம் தெரிவிக்கப்பட்டது.

4) சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய ஆசிரியர்கள் அனைவரும் சென்னை மாநகராட்சி உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளுக்கு நேரடியாக சென்று 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களின் பட்டியல் தலைமை ஆசிரியர்களிடம் இருந்து பெற்று அனைவருக்கும் அஞ்சல் அட்டை மூலம் சேர்க்கை குறித்து விவரம் தெரிவிக்கப்பட்டது.

5) கல்வி அலுவலர் தலைமையில் சென்னை மாநகராட்சி அனைத்து உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களின் கூட்டம் மாணவர் சேர்க்கை குறித்து சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் 09.07.2008 அன்று நடைப் பெற்றது.

6) மேலும் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு தோல்வி அடைந்து உடனடி தேர்வு (Instant Examination) எழுதி தேர்ச்சி பெற்ற சென்னை மாநகராட்சி மாணவர்களின் பட்டியல் கல்வி அலுவலரின் அனுமதி பெற்று கூடுதல் செயலர் அரசு தேர்வு வாரியம் அவர்களிடம் இருந்து பட்டியல் பெறப்பட்டு அனைவருக்கும் அஞ்சல் அட்டைமூலம் தொழிற் பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் சேர்க்கை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள செயல்பாடுகள் மற்றும் அரசாணை எண்.55ன் படி தற்போது சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் கணினி மற்றும் குழாய் பொருத்துநர் பாட பிரிவில் பயிற்சியில் சேர்ந்து பயிற்சி பெற்று வரும் மாணவர்கள் பட்டியல் கீழ்வருமாறு:–

| வரிசை எண் | பாடப் பிரிவு | மத்திய அரசு NCVT அனுமதித்த சேர்க்கை எண்ணிக்கை | தற்போது பயிற்சியில் சேர்ந்துள்ள மாணவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கணினி இயக்குநர் மற்றும் & நிகழ்ச்சித் தொகுப்பு உதவியாளர் | | |
| | அலகு –1 | 20 | 12 |
| | அலகு –2 | 20 | 11 |
| 2. | குழாய் பொருத்துநர் | 19 | 19 |
| | மொத்தம் | 59க்கு | 42 |

மேலும் மற்ற பாடப் பிரிவுகளான பிட்டர், கம்மியர் மோட்டார் வாகனம், மின் பணியாளர் மற்றும் மின்னணுவியல் ஆகிய நான்கில் உபகரணங்கள் முழுமையாக கொள் முதல் செய்யப்படாத மின்னணுவியில் பாட பிரிவை தவிர்த்து கருவிகள் உபகரணங்கள் முழுமையாக கொள்முதல் செய்யப்பட்ட மூன்று பாட பிரிவுக்கும் மத்திய அரசின் NCVT அனுமதி பெற முதல் கட்ட ஆய்வு 05.08.2008 அன்று வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை கிண்டி அலுவலர்கள் மூலம் நடைப்பெற்று மத்திய அரசின் நிலைக் குழு ஆய்வை எதிர்நோக்கி உள்ளது.

மத்திய அரசு NCVT அனுமதி பிட்டர், கம்மியர் மோட்டார் வாகனம் மற்றும் மின் பணியாளர் பாட பிரிவுக்கு கிடைக்கப் பெற்று வரும் 2009 – 2010 ம் கல்வி ஆண்டில் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் ஐந்து பாட பிரிவுகளுடன் செயல்படும் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

அரசாணை எண்:55ல் பக்கம் –3, வரிசை –2ல் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்கு மாணவர் சேர்க்கை 80 % விழுக்காடு சென்னை மாநகராட்சி பள்ளியில் படித்த மாணவர்களுக்கும் மீதி 20 % விழுக்காடு மாநகராட்சி ஊழியர்களின் குழந்தைகளை மட்டுமே கொண்டு ஆணை வழங்கப்பட்டு உள்ளதால் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்கு மாணவர் சேர்க்கை முழுமை பெறாமல் சில இடங்கள் காலியாக வைக்க வேண்டி உள்ளது. இதனால் 2008–09ம் கல்வி ஆண்டில் 28% விழுக்காடு காலி இடங்கள் நிரப்பப்படாமல் விடுபட்டன. காலியாக உள்ள இந்த இடங்களில் சென்னை மாவட்டத்தின் எல்லைக்கு உட்பட்ட மற்ற பள்ளிகளில் படித்து தேர்ச்சி பெற்று சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சியில் சேர்க்கைக்கு பலமுறை அணுகியும், சமுதாயத்தில் மிகவும் பின் தங்கிய ஏழை எளிய மாணவர்களுக்கு சேர்க்கை செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது.

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் தொடங்கிய நோக்கமே சமுதாயத்தில் பின் தங்கிய ஏழை எளிய மாணவர்களுக்கு தொழிற் பயிற்சியுடன் கூடிய தொழிற் கல்வி அளித்து அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கமே ஆகும்.

ஆகவே சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் 2009– 2010 ம் கல்வி ஆண்டுக்கான பயிற்சிக்கு மாணவர் சேர்க்கையில் சமுதாயத்தில் மிகவும் பின் தங்கிய அனைத்து ஏழை எளிய மாணவர்களும் பயன் பெறும் பொருட்டும் மற்றும் அரசு அனுமதித்த எண்ணிக்கைக்கு மாணவர் சேர்க்கையை நிறைவு செய்ய வேண்டியும் அரசு வழங்கியுள்ள அரசாணை எண் 55ல், பக்கம் –3, வரிசை–2ல் உள்ள ஆணையை கீழ்கண்ட **"அ"** வில் உள்ளபடி மாற்றி தர அரசுக்கு பரிந்துரைக்க

சென்னை மாநகராட்சி கல்வித் துறை தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்கான மாணவர்கள் சேர்க்கையில் 80 % மற்றும் 20% என்ற விழுக்காடு முறையை மாற்றி சென்னை மாநகராட்சி பள்ளியில் படித்த மாணவர்களுக்கும் மற்றும் மாநகராட்சி ஊழியர்களின் குழந்தைகளுக்கும் முன்னுரிமை அளித்தும் மீதம் காலியாக உள்ள இடங்களுக்கு சென்னை மாவட்டத்தில் பிற பள்ளிகளில் படித்த சமுதாயத்தில் பின் தங்கிய ஏழை எளிய மாணவர்களை அரசு விதிகளின்படி சேர்ப்பதற்கும்

நிலைக் குழு (கல்வி) , நிலைக் குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமன குழு மூலம் மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"8.12.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.87/08, நாள்:8.12.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

19.12.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மானஎண்.296/2008 நாள்: 19.12.2008-ன்படி இறுதி பத்தியில் உள்ள– "அரசு வழங்கியுள்ள அரசாணை எண்.55–ல், பக்கம்3, வரிசை 2ல் உள்ள ஆணையை கீழ்க்கண்ட "அ"வில் உள்ளபடி மாற்றி தர அரசுக்கு பரிந்துரைக்க "என்பதற்கு பதிலாக "அரசு வழங்கியுள்ள அரசாணை எண்.55–ல், பக்கம் 3, வரிசை 2ல் உள்ள ஆணையை மாற்றி தர அரசுக்கு பரிந்துரைக்க " என்ற திருத்தத்துடன் இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"நிலைக்குழு (கல்வி) மற்றும் நியமனக்குழு பரிந்துரையின்படி மாணவர் சேர்க்கை முறையை மாற்றியமைக்க அரசுக்கு பரிந்துரை செய்யலாம் என்ற கருத்தின் அடிப்படையில் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ1/17617/2008**

**ஆணையாளர் அவர்களின் 07.01.2009 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :13/2009 பொருள் எண். 13

**செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சியில் செயற்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப் பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியன மன்றம் பெற்றுள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் தேதி ஆகும். இப்பதவிக்கான ஊட்டப்பதவி உதவி செயற்பொறியாளர் பதவியாகும்.

மேற்படி பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| Executive Engineer | By promotion | 1. (a) Must possess the B.E. degree (Civil or Mechanical) of any University or Institution recognised by the University Grants Commission for purposes of its grant; or<br><br>(b) Must possess the Diploma in Civil or Mechanical Engineering of the State Board of Technical Education or any other qualification considered equivalent thereto:<br><br>Provided that a person possessing the Diploma in Engineering of the State Board of Technical Education and Training should have shown exceptional merit as Assistant Executive Engineer; and<br><br>2. Must have put in a service of not less than five years as Assistant executive Engineer in Corporation |

கடந்த ஆண்டு 01.04.2007 மைய நாளாகக் கொண்டு மேற்படி பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, 4 நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் செயற் பொறியாளர் பதவியில் நான்கு பணியிடங்கள் காலியாக உள்ளன.

இந்த ஆண்டு செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க 01.04.2008 நாளானது மைய நாளாக உள்ளதால், 1.4.2008அன்றைய நிலையில் இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க தகுதியான உதவி செயற்பொறியாளர் விவரங்களையும் காலிப்பணியிட விவரங்களையும் கோரி அனுப்பப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் துறை மற்றும் மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட விவரங்களின்படியும் தகுதிவாய்ந்த கீழ்காணும் நான்கு உதவி செயற் பொறியாளர்களின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | தகுதிவாய்ந்த உதவி செயற் பொறியாளர் | தற்போது பணிபுரியும் பணியிடம் |
|---|---|---|
| 1 | திரு.டி. கலைமணி | மழைநீர் வடிகால் துறை |
| 2 | திரு.ஜி.ஜி. ராஜேந்திரன் | இயந்திர பொறியியல் துறை |
| 3 | திரு.எ. சண்முகம் | மண்டலம்–5 |
| 4. | திரு.ஜி. பிரபாகரன் | மண்டலம்–6 |

மேற்படி தகுதிவாய்ந்த உதவி செயற் பொறியாளர்களின் பணிக்காலம் உதவி செயற் பொறியாளர் பதவியில் அரசாணை எண்.71 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.03.2001ன்படி வரன்முறை செய்யப்பட்டுள்ளது. இவர்கள் மீது எந்தவிதமான ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ இன்றைய தேதியில் நிலுவையில் இல்லை.

எனவே, கீழ்காணும் இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொ.து.ந.க.எண்.ஈ1/17617/2008**

அ) உதவி செயற் பொறியாளர் பதவியில் அரசின் உறுதியாக்கம் பெற்றுள்ள கீழ்கண்ட நான்கு உதவி செயற் பொறியாளர்களின் பெயர்களை கொண்ட 01.04.2008ஐ மைய நாளாகக் கொண்டு செயற் பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கவும்,

1 திரு.டி. கலைமணி
2 திரு.ஜி.ஜி. ராஜேந்திரன்
3 திரு.எ. சண்முகம்
4 திரு.ஜி. பிரபாகரன்

ஆ) செயற் பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள நான்கு காலிப்பணியிடங்களுக்கு தெரிவுப்பட்டியலில் உள்ள தகுதிவாய்ந்த உதவி செயற் பொறியாளர்களுக்கு அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு தற்காலிகமாக ரூ.10,000 – 325 –15200 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கவும்,

இ) உதவி செயற் பொறியாளர் பதவியில் பணிமூப்பு நிர்ணயம் செய்வது குறித்து நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றம் வழங்கவிருக்கும் தீர்ப்புக்குட்பட்டு, செயற் பொறியாளர் பதவியில் பணி உறுதியாக்கம் செய்ய அரசுக்கு தக்க பிரேரணையினை பின்னர் அனுப்பவும்,

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.ஈ1/37345/2007

ஆணையாளர் அவர்களின் 28.11.2008 நாளிட்ட குறிப்பு

27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :14/2009 பொருள் எண். 14

தொழில் நுட்ப குழுவில் மாற்றம் செய்த தகவல்

28.12.2006 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு கடித எண்.159/MG1/ 2006ல் இரண்டாம் சென்னை திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய் பதித்தல் பணிகள் தொடர்பாக நடைபெற்ற சாலை மறு சீரமைப்புப்பணி மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளின் முறைகேடுகள் நடந்திருப்பதாக விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறை இயக்குநர், அவர்களால் நியமிக்கப்பட்ட தொழிற் நுட்ப தணிக்கை குழு (Technical Committee) ஆல் தெரிவிக்கப்பட்டு உள்ளது எனவும் மேலும் சம்மந்தப்பட்ட மாநகராட்சி பணியாளர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் சம்பந்தமாக சமர்ப்பிப்பது யாதெனில் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறை இயக்குநர் அவர்களால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழு (Technical Committee)ஆல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கை அதன் சம்பந்தப்பட்ட விவரங்கள் மற்றும் கோப்புகளை ஏற்கனவே 03.08.2007 நாளிட்ட ஆணையாளர் அவர்களின் ஆணையின்படி நியமிக்கப்பட்டுள்ள குழுவில் சிறிய மாற்றம் செய்து, கீழ்காணும் அலுவலர்களை கொண்ட குழு ஒன்றினை நியமித்து மேலீடான ஆய்வு (Super Check) செய்ய மாமன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

1. தலைமை பொறியாளர் (பொது)
2. கண்காணிப்பு பொறியாளர் (பாலங்கள்)
3. கண்காணிப்பு பொறியாளர் (மழைநீர் வடிகால் துறை)
4. விழிப்பு அலுவலர்
5. சட்ட அலுவலர் மற்றும்
6. செயற்பொறியாளர் ( தொழிற்நுட்ப குழுமம்)– கூட்டுநர்

“இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பா.து.ந.க.எண். பா2/ 943 /2007

ஆணையர் அவர்களின் 02.01.2009 நாளிட்ட குறிப்பு

27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :15/2009 பொருள் எண்.15

## கட்டாய ஓய்வு

சென்னை மாநகராட்சி பாலங்கள் துறையில் செயற் பொறியாளராக பணிபுரிந்த திரு.எம்.ரங்கநாதன் அவர்கள் உரிய அனுமதி பெற்று சொத்துக்கள் வாங்கியுள்ளாரா என்பது குறித்து பட்டியலிட்டு 02.04.2007 நாளிட்ட கடிதம் மூலம் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறை கண்காணிப்பாளர் கோரியுள்ளார்.

மேற்கண்ட விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பாளரின் கடிதத்தின் அடிப்படையில் தனியரது பணிபதிவேட்டில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட போது உரிய அனுமதி பெறாமல் சொத்துக்கள் வாங்கியதற்காக, 26.07.2007 நாளிட்ட ஆணையரது ஆணையின்படி, திரு.எம். ரங்கநாதன், செயற்பொறியாளர், அவர்களை சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகள் 1970 பிரிவு எண்10(b )ன் அடிப்படையில் தற்காலிக பணிநிக்கம் செய்யப்பட்டது. மேலும், தனியரின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகள் 1970 பிரிவு எண் 10(b)ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு 21.09.2007 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கி விளக்கம் கோரப்பட்டது. பின்னர் விளக்கம் பெறப்பட்டு விதிகளின்படி விசாரணை நடத்தப்பட்டு, விசாரணை அறிக்கை பெற்று இறுதி ஆணை வேண்டி அரசிற்கு அனுப்பப்பட்டது.

அரசாணை எண்.79, ந.நி.ம.கு.வ. துறை 29.02.2008 நாளிட்ட ஆணையில், திரு.எம். ரங்கநாதன், செயற் பொறியாளர் ( தற்காலிக பணி நீக்கம்) அவர்களுக்கு தண்டணையாக கட்டாய ஓய்வு அளித்தும், அன்னாருக்கு 75 விழுக்காடு பணிக்கொடை தொகை மற்றும் ஓய்வூதியம் வழங்குமாறு ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட அரசாணையினை தனியர் பெற்று கொண்டு, உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். உயர்நீதி மன்ற நீதி பேராணை எண்.9750/2008, 06.05.2008ல், தனியருக்கு 75 விழுக்காடு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை இரண்டு வார காலத்திற்குள் வழங்குமாறு ஆணையிடப்பட்டது.

நீதி பேராணை அடிப்படையில், திரு.எம். ரங்கநாதன், செயற் பொறியாளர், அவர்களுக்கு 75 விழுக்காடு ஓய்வூதியம் மற்றும் 75 விழுக்காடு பணிக்கொடையில் 75 விழுக்காடு ஆணையரது 20.06.2008 நாளிட்ட ஆணை பெற்று தனியருக்கு வழங்கப்பட்டது.

மேற்கண்டுள்ள நிகழ்வுகளுக்குப் பின், திரு.எம். ரங்கநாதன், செயற்பொறியாளர், பாலங்கள் துறை (பணிமாற்று அடிப்படையில் பணியிடம் மழைநீர் வடிகால் துறை) அவர்களை அரசாணை எண்.79 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 29.02.2008 நாளிட்ட ஆணையின்படி 27.07.2007ல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டது.

தனியர் சீருந்து வாகன முன்பனம் (CAR ADVANCE) பெற்றார். மேற்படி முன்பணம் நேர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் வாகன முன்பண நிலுவைத்தொகையினை பின்னர் பணிக்கொடையில் பிடித்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்குறித்த நிகழ்வுகளின் அடிப்படையில் தனியர் மீது தணிக்கை தடைகள் மற்றும் நிதி இழப்பீடு ஏதும் இருப்பது பின்னர் தெரியவரின் அவற்றிற்கு அவரை பொறுப்பாக்கி அவற்றை அன்னாரின் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணிக்கொடையில் அல்லது ஓய்வூதிய அகவிலைபடியில் பிடித்தம் செய்யப்படும்.

எனவே, திரு.எம். ரங்கநாதன், செயற் பொறியாளர், பாலங்கள் துறை (பணிமாற்று அடிப்படையில் பணியிடம் மழைநீர் வடிகால் துறை) அவர்களை மேற் கூறப்பட்டுள்ள நிபந்தனைக்கு உட்படுத்தி 27.07.2007 அன்று கட்டாய ஓய்வு அளித்து சென்னை மாநகராட்சி பணியிலிருந்து கட்டாய ஓய்வு பெற அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளதை நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது"

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்